**8.41 8.411920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (1920–ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 5) – மண்டல ஆய்வாளர்களின் கடமைகளையும் அதிகாரங்களையும் பேரூராட்சிகளைப் பொருத்தவரையில் பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர்கள் நிறைவேற்ற ஆணையிடப்படுகிறது.**

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (நிலை) எண்.216 நாள் : 22.8.1997

படிக்கப்பட்டது :

பேரூராட்சிகளின் இயக்குநர் நேர்முக கடித எண். 18603/97/ஈ, நாள் : 11.8.1997

**ஆணை :**

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் சில பிரிவுகளில் உள்ள கடமைகளையும் அதிகாரங்களையும் நிறைவேற்றுவதற்கு நகராட்சிகளின் மண்டல ஆய்வாளர்களுக்கு (Regional Inspector of Municipalities) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. முன்பு இருந்த நகராட்சிகளின் மண்டல ஆய்வாளர்கள் பதவி தற்போது நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்கள் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், தற்போது மண்டல ஆய்வாளர்கள் பதவியில் பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டத்தின்படி 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவுகள் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும். எனவே, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் கட்டத்தில் கூறப்பட்டுள்ள நகராட்சிகளின் மண்டல ஆய்வாளர்களின் கடமைகளையும் அதிகாரங்களையும், பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர்கள் நிறைவேற்றுவர் என்று அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**

அரசுச் செயலாளர்